அன்பான பெரியோர்களே! தாய்மார்களே! சிறுவர்களே!

நீங்கள் இக் கதையை சுலபமாக விளங்கிக் கொள்ளவே கீழ் உள்ளவற்றைக் கூறுகின்றேன். "கோக்கலா" என்பது ஒரு வெள்ளைநிறமான அழகான கூரிய கண்களையுடைய பிராஞ்சு நாட்டு நாய். "இர்மா" என்பது எப்போதும் ஒரு சாந்தமான பார்வை கொண்ட கண்களையுடைய, வெள்ளை நிற பாதங்களையும், வெள்ளை நிறமான வாலையும் கொண்ட கரிய நிறமான உலகிலேயே மிகவும் சாதுவான ஒரு நாய். "ரைகர்" என்பது மிகப் பெரிய ஒரு பூனையாகும். இது எப்போதும் மற்றவர்களை உரசிச் சென்று, தான் இருப்பதை "நான் இங்கு இருக்கிறேன்" என்பதை வெளிப்படுத்தும் தன்மை உடையது.

வணக்கம்! எனது பெயர் கோக்குலா.

"கோக்குலா" என்பது கிரேக்க மொழியில் அழகு எனப்பொருள்படும். கிரேக்கர் பெண்களை "கோக்குலா" என அழைப்பர். நான் ஒரு பாவை போல உண்மையிலேயே அழகு. ஆகையால் எனக்கு இப்பெயர் மிகவும் பொருத்தமானதாகும். எனக்கு முதல் எசமான் இட்ட பெயர் "லக்கி" என்பதாகும். எனக்குக் கிட்டத்தட்ட எட்டு வயதாகிறது. இப்பவும் நான் உருவத்தில் அப்படியே அழகாக இருக்கிறேன். எனது உரோமம் முன்பை விட அழகாக பட்டுப்போல் உள்ளது. நான் இருமுறை தாய்மை அடைந்திருக்கிறேன். அதெல்லாம் எனது இரண்டு வயதிலேயே நடந்து முடிந்து விட்டது.



எனது முதல் எசமான் என்னை எனது இரண்டாவது பிரசவத்தின் பின் வேறு ஒருவருக்குக் கொடுத்து விட்டார். காரணம் எனக்கு வயதாகிவிட்டது என்று. நான் இப்போது எனது இரண்டாவது எசமானுடன் சந்தோஷமாக இருக்கிறேன். அவர் ஒரு உலோபித்தனமுள்ள எதையும் மிகைப்படுத்தும், கடுமையான மனிதர். அடிக்கடி என்னை ஏசுவார். ஆனாலும் நான் என் உள்மனதைத் தொட்டுச் சொன்னால் அவர் என்னை மிகவும் நேசிக்கிறார் என்றே நினைக்கிறேன். அவர் மிருகங்களை மிகவும் விரும்புபவர். அதனால் தான் அவரது சக ஊழியர்கள் அவரை "நாய்ப்பிரியன்" என அழைக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு நாளில் 24 மணித்தியாலமும் அவர் என்னை அவருடைய அலுவலகத்தில் அவருக்குப் பக்கத்திலே உள்ள கதிரையில் இருத்தி வைத்திருப்பார். எனக்கு அவருடன் இருப்பதில் பெருமகிழ்ச்சி எனக்கு உரோமம் சுருள் என்பதால் மிகக் கவனத்துடன் அதைச் சீவிவிட்டு, நகம் வெட்டி, கண்மயிர் எல்லாம் சரி செய்து கிழமைக்கு 2, 3 தடவை குளிக்கவார்த்து கழுத்துக்கு அழகான பட்டியும் கட்டிவிடுவார். கண்ணுக்கு அடியில் ஒரு விதமான எண்ணையும் போட்டு விடுவார். இது ஏனெனில் நான் சிலரைப் பார்த்து குலைக்க அவர் என்னைக் கடுமையாக ஏசுவதால், நான் அழுததால் கண்ணுக்கடியில் ஏற்பட்ட தழும்புகளைப் போக்குவதற்காகும். ஆனால் உண்மையிலேயே சீருடை அணிந்தவர்கள், கட்டைக் காற்சட்டை போடும் ஆண்கள் மற்றும் தமது காலை எனக்கு காட்டுபவர்களைப் பார்த்து உரக்க குலைக்க எனக்கு விருப்பம்.

சில வேளைகளில் நான் அதிகம் குலைப்பதால் எசமான் என்னை ஏசுவார். ஆனால் நாள் முழுவதும் விடாமல் தொடர்ந்து குலைக்க எனக்கு விருப்பம். எனது எசமான சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லுவார். ஒரு உடைந்த பழைய "ரிக்கோட்" மாதிரி "நிற்பாட்டு கோக்குலா". "நிற்பாட்டு கோக்குலா" என்று அவர் சொல்லுவார். இருந்தாலும் நான் ஆட்களைப் பார்த்து குலைத்துக் கொண்டே இருப்பேன். நான் தெரிந்தவர்களைப் பார்த்தும் தெரியாதவர்களைப் பார்த்தும் குலைப்பேன். இது நான் அவர்களைப் பார்த்து "வணக்கம்" கூறி எனது அழகைப் பாருங்கள் என்று கூறும் ஒரு முறையாகும்.

2001ம் ஆண்டு பங்குனிமாதம் சி.பி.சியில் நான் தொலைக்காட்சியில் தோன்றியதில் இருந்து எனது “குலைத்தல்“ மிகப் பிரபல்யமாகிவிட்டது. நான் எனது எசமானுடன் நடந்து கொண்டு ஒளிப்படக் கருவியைப் பார்த்துக் குலைப்பதை நீங்கள் தொலைக்காட்சியில் காணலாம். அத்துடன் கனடாவில் மிகப் பிரபல்யமான பத்திரிகையான “ரொறன்ரோ ஸ்டார்“ பத்திரிகையிலும் (மாசி 5. 2001) நீங்கள் என்னை நான் எனது எசமானின் கையில் இருக்கும் படத்தில் காணலாம். கிட்டத்தட்ட அரைவாசிப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அப்படத்தில் நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன் என்றும் எவ்வளவு பிரபல்யமான நாய் என்றும் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.



VINCE TALOTTA/TORONTO STAR

**EDIBLES ENTREPRENEUR:** The king of multicultural comestibles, Peter Goudas cuddles his constant companion Koukla at the Toronto office decorated with photos including those from his last vacation to Greece in 1989.

எனக்கு நல்ல ஞாபகமிருக்கு, ஒருமுறை நானும் எனது எசமானும் தெருவில் நடந்து போய்க் கொண்டு இருக்கும் போது எங்களுக்கு எதிராக ஒரு பெரிய நாயுடன் ஒரு மனிதர் நடந்து வந்து கொண்டிருந்தார். அதைப் பார்த்த எனது எசமான் உடனடியாக என்னை அள்ளி எடுத்து தனது கைக்குள் இறுக்கிப் பிடித்துக் கொண்டார். நான் பற்களை இறுகக் கடிப்பதைப் பார்த்த எனது எசமான் எங்கே என்னை விடுவிக்க நான் அவரைக் கடித்து விடுவேனோ என்று பயந்து விட்டார். பெரிய நாயுடன் கிட்ட வந்த அந்த மனிதர் எனது எசமானைப் பார்த்துப் “பயப்படவேண்டாம். எனது நாய் மிகவும் சாதுவானது. மூர்க்கத்தனம் அற்றது“ என்று சொன்னார். அதனைக் கேட்ட எனது எசமான் திரும்பிப் பார்த்து ஒரு சிறு புன்சிரிப்பை உதிர்த்து விட்டு “நான் எனது நாயைப் பற்றி யோசிக்கவில்லை. உமது நாயைப் பற்றியே கவலைப்பட்டேன். ஏனென்றால் கோக்குலாவை விட்டேன் என்றால் அது உமது “கோலியாத்தை“ (பெரிய நாயை) சிறிது நேரத்தில் கடித்து குதறி விடும் என்றார்.“ பாருங்கள்!! எனது எசமானுக்கு எனது வீரம் நன்கு தெரிந்திருக்கிறது. சிலருக்கு நான் ஒரு ஒட்டகத்திலுள்ள உண்ணி போலத் தெரியலாம். ஆனால் எனது கடிக்கும் திறன் சில நேரங்களில் வீர காவியம் எழுதும் அளவுக்கு வளர்ந்து விடுகிறது.

எனது எசமான் கிட்டத்தட்ட ஒரு நாளில் 16 மணித்தியாலங்களுக்கு மேல் அவரது அலுவலகத்தில் வேலை செய்வார்.

நான் எப்பொழுதும் அவருக்கும் பக்கத்தில் உள்ள கதிரையில் அல்லது அவரது மடியில் அவருடனேயே இருப்பேன். வேலை முடிந்த பின்னும் அவர் என்னைத் தன்னுடனேயே வைத்திருப்பார். படுக்கைக்கு போகும் போதும் கூட. கூடுதலான நாட்களில் நான் அரைக் கண் நித்திரையே கொள்வேன். காரணம் அவர் என்னை விட்டு விலத்தாது இருக்கப் பார்த்துக் கொள்வேன். நான் மிகக் களைப்பாய் இருந்தால் அவரது காலிலேயே நித்திரை கொள்வேன். ஏனெனில் அவர் எழும்ப நினைத்தாலோ அசைந்தாலோ நான் விழித்துக் கொள்வேன் அல்லவா! அதனால் அவர் என்னை விட்டு விட்டு போக முடியாது.

எனக்கு நல்ல ஞாபகம், ஒரு முறை எனது எசமான் வைத்தியரிடம் சென்று தான் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் போது தனது நெஞ்சுக்கு மேல் ஏதோ பாரம் அழுத்துவதாக கூறினார். சரி அப்போதாவது வெளிப்படையாக கூறினாரே அன்றில் இருந்து நான் அவர் நெஞ்சின் மேல் ஏறிப்படுப்பதை நிறுத்தி விட்டேன். ஆனால் அவருக்கு இன்றும் நான் தான் அந்தப் பிரச்சனைக்கு காரணம் என்பது தெரியாது. எனது எசமான் மிகச் சில மணி நேரமே ஆழ்ந்த நித்திரை செய்வார்.



எனக்கும் சுகமான ஆழ்ந்த தூக்கம் தேவை. ஏனெனில் நானும் நாள் முழுவதும் கடினவேலை செய்கிறேன். இருந்தாலும் கூட, எனக்கு விடுமுறை கிடையாது. எனது வேலைக்கு சன்மானமும் கிடையாது. இது உண்மையிலேயே "ஒரு நாய் வாழ்க்கை".

இரு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள், எனது எசமானுடன் இன்னொருவர் கதைக்கும் போது எனது மாஜிக் கணவன் "சிப்பி" பாரமான ஒரு மோட்டார் வண்டியின் சில்லுக்குள் தலை அகப்பட்டு நசிபட்டு இறந்து விட்டதாக கேள்விப்பட்டு மிகவும் மனவருத்தம் அடைந்தேன். நான் பந்தை வைத்து நடுத்தெருவில் விளையாட வேண்டாம் என்று பல தடவை சிப்பிக்கு சொல்லியும் அவர் எனது சொல்லைக் கேட்கவில்லை. அதனால் வந்த வினை இது. அந்த நாளில் இருந்து நான் சட்டபூர்வமாக விதவையாகி விட்டேன். மறுமணம் செய்யவும் நான் திட்டமிடவில்லை.

எனக்கு அவரைத் தவிர வேறு ஆண் நண்பர்கள் இல்லை. ஆனால் எனக்கு ஒரு உற்ற நண்பி இருந்தாள். அவள் பெயர் "இர்மா". அவள் ஒரு ஜரிஸ் நாட்டுக் கரிய நாய். இர்மா நான் படத்தில் வருவதற்கு சில வருடங்களுக்கு முன்பு இருந்தே எனது எசமானுடன் இருக்கிறாள். அவள் அதிகம் குலைக்காத அமைதியான சுபாவமுள்ள பண்பாக ஆட்களை வரவேற்கும் தன்மை கொண்டவள். தன்னை மிகவும் துப்பரவாக எப்பொழுதும் வைத்துக் கொள்வாள். ஆனால் ஒரு பிழை என்னவெனில் நித்திரை செய்யும் போது பெரிய சத்தம் போட்டு குறட்டை விடுவாள். அவள் கரிய உரோமம் உடையவள். குளித்து விட்டு வந்தால் அவளது உரோமம் பட்டுப் போல் இருக்கும். எங்கள் இருவருக்கும் பொதுவான இரண்டு காரியங்கள் உண்டு. ஒன்று நாம் இருவரும் எமது எசமானை மிகவும் பிரியமாக நேசிக்கிறோம். இரண்டு நாங்கள் இருவரும் ஒரே நேரத்திலேயே மலம் கழிக்கச் செல்வோம் முதலில் இர்மா பின் நான்.



எனது எசமானிடம் "ரைகர்" என்ற பெயருடைய ஒரு பூனையும் உண்டு. அது அழகான, மிருதுவான பொன்னிற உரோமமுடைய உடலை உடையது. அதன் நிறத்தையும் உருவத்தையும் பார்த்தால் "பிரேக்பாஸ்ட் அற் ரிப்னிஸ்" என்ற படத்தில் வரும் "அவ்றே கீபேன்" க்கு சொந்தமான பூனையின் வழிக் கொப்பாட்டன் போலக் காணப்படுகிறது. கணனியும் அச்சடி கருவியும் மிகவும் சௌகரியமாகவும், சூடாகவும் இருப்பதால் "ரைகர்" கூடுதலான நேரத்தை அவற்றின் மேலேயே செலவிடுகிறது. சிலவேளைகளில் அலுவலகத்திற்கு

வெளியே சென்று பறவைகளைப் பிடிக்க எத்தனிக்கும். பெரும்பாலும் அதில் வெற்றியும் காணும். நானும் ரைகரும் ஒன்றாக ஒரே சோபாவில் கால்களை நீட்டிப் படுத்துத் தூங்குவோம். ஆனால் இர்மா சோபாவிற்கு கீழ் உள்ள கம்பளத்தில் தான் படுத்துத் தூங்கும்.

எமது எசமான் தான் போகும் இடங்களுக்கு எல்லாம் எங்களையும் உடன் அழைத்துச் செல்வார். ரைகருக்கு பயணம் செய்யப் பிடிக்காது. அது எங்களுக்குப் பின்னால் எங்களைப் பார்த்துக் கொண்டு நிற்கும். நாங்கள் எல்லோரும் காரின் பின் ஆசனத்திலேயே உட்காரவேண்டும் என்றாலும் நான் சிறிது நேரத்தில் எசமானுக்குத் தெரியாமல் மெதுவாக முன் ஆசனத்திற்கு நுழைந்து அவரது மடியில் இருந்து கொள்வேன். நான் இதை நேரம் பார்த்துச் செய்வேன். அவர் வாகன நெருக்கடியில் அகப்பட்டு என்னைக் கவனிக்க நேரம் இல்லாமல் இருக்கும் போது மெதுவாக முன்னுக்கு நுழைந்து விடுவேன். எனவே அவரும் வேறு வழியின்றி கோக்குலா வந்து இதிலே பேசாமல் அமைதியாக உட்காரு என்று சொல்லி விடுவார். இவ்வாறு ஒரு நாள் எசமானின் மடியில் அமர்ந்து பிரயாணம் செய்யும் போது நகர்காவலர் எங்களை சோதனையிட நிறுத்தினார். எசமான் யன்னலைத் திறந்து நகர்காவலருடன் கதைக்கும் போது என்ன நடக்கிறது என்பதை அறியாத நான் நகர்காவலரைப் பார்த்து குலை நடுங்கும்படி ஒரு பெரிய குலைப்பு குலைத்து விட்டேன். அப்ப ஓட்டம் பிடித்த நகர்காவலர் இப்பவும் தொப்பியும் இல்லாமல் துர்நாற்றமுடைய ரக்காற்சட்டையுடனும் ஓடிக்கொண்டே இருப்பார் என நினைக்கிறேன்.

எமது எசமான் எங்களை அவரது முக்கியமான அலுவலக கூட்டங்களுக்கும் கூட்டிச் செல்வார். உள்ளே கூட்டிச் செல்லக் கூடாது என்றால் சிறிது நேரம் எங்களைக் காரில் விட்டு விட்டுச் செல்வார். இர்மா மிகவும் சௌகரியமாகவும், அமைதியாகவும் அவர் வரும் வரை காரில் காத்திருப்பாள். ஆனால் ஆட்கள் கார் யன்னலுக்குக் கிட்ட வந்து இப்படி ஒரு அழகான நாயை முன்பொருநாளும் பார்த்ததே இல்லை என்று சொல்லி என்னை எட்டிப் பார்க்கும் போது எனக்கு மிகுந்த தொந்தரவாக இருக்கும். எனது எரிச்சலை எசமானுக்கு காட்டு முகமாக நான் எனது பற்களால் காரின் "டாஸ்போட்"டை கடித்து சப்பி எனது அழகான பல் அடையாளங்களைப் பதித்து விடுவேன்.

எனக்கும் இர்மாக்கும் உள்ள ஒரு பெரிய வித்தியாசம் என்னவெனில் இர்மா எதையும் சாப்பிடுவாள், சாப்பாட்டை நிற்பாட்ட மாட்டாள். அவள் தோட்டத்தில் உள்ள புல்லையும் தின்பாள். எப்ப சாப்பாட்டை நிறுத்த வேண்டும் என்பது அவளுக்குத் தெரியாது.




எனக்கு ஞாபகமிருக்கு ஒருமுறை எமது எசமான் எங்களை ஒரு கிரேக்க வனபோஜனத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு ஆட்கள் ஆடு அடித்து நெருப்பில் வாட்டி உண்டு மகிழ்ந்தனர். இர்மா பலநாட்கள் பட்டினி கிடந்த மாதிரி ஒரு குழிவிழுந்த பார்வையுடன் ஒவ்வொரு மேசையாகச் சென்றான். அவளைப் பார்க்க மிகப் பரிதாபமாக இருந்ததால் எல்லோரும் அந்தப் பசியாயிருந்த, கவனிப்பாரற்ற ஏழை நாய்க்கு பார்த்துப் பாராமல் சாப்பாடு கொடுத்தனர். இறுதியாக அதிகமாக உண்டதால் நடக்க

முடியாமல் இருந்த அவளை எமது எசமான் தூக்கிக் கொண்டு வந்து காரில் ஏற்ற வேண்டியதாயிற்று. அந்த நாள் என்னமாதிரியான நாள் தெரியுமா!

மாதம் ஒருமுறை எமது எசமான் எங்களை சலூனுக்கு அழைத்துச் சென்று மயிர்சீவிவிடுதல், வெட்டுதல், குளிக்க வார்த்தல், நகம் வெட்டுதல் என்பனவற்றைச் செய்விப்பார். எனக்குத் தெரியாது எவ்வளவு கடதாசி (கடதாசி நோட்டு விசேடமாக நான் அதைப் பிராஞ்சு பிராங்க என்று சொல்வேன்). இதற்குச் செலவழிக்கிறார் என்று, ஆனால் இது தேவையான செலவு என்பதும் எனக்குத் தெரியும். அந்த நாட்களை மறக்க முடியாது. ஏனெனில் அதன் பின் நாம் அலுவலகம் செல்லும் போது எல்லோரும் எங்களைப் பார்த்து மிக அழகாக இருக்கிறோம் என்று கூறுவார்கள். அவர்களுக்கு நாம் எவ்வளவு வருத்தப்பட்டோம். சலூனில் என்றும், ஒரு நாய்க்கு சலூனில் போய் மணிக்கணக்காய் இருந்து நகம் வெட்டுவது எவ்வளவு சிரமம். அத்துடன் தற்சமயம் அவர்கள் பிழையாக வெட்டினால் எவ்வளவு நோகும் என்றும் விளங்கவா போகிறது.

ஒரு நாள் எசமான் என்னை ஒரு பெரிய வினோதமான “றெஸ்ரோறன்ட்“ என அழைக்கப்படும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு மனிதர்கள் மேசையருகே உட்கார்ந்து விதம் விதமான உணவுகளை இன்றே சாப்பிட்டு முடித்து விட வேண்டும் என்ற தோரணையில் அதிகமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். எசமான என்னை எவருக்கும் தெரியாமல் தனது சட்டைக்குள் வைத்து உள்ளே எடுத்துச் சென்றார். என்னைச் சத்தம் போடாமல் யாருக்கும் தெரியாமல் மேசைத்துணிக்குக் கீழ் தனது மடியில் இருக்கச் சொன்னார். நானும் அப்படியே செய்தேன். சில பையன்கள் வெள்ளை உடுப்பு அணிந்து “பப்பிலியோன்“ (பிரஞ்சில் கழுத்துப்பட்டி) எனப்படும் கழுத்துப்பட்டி அணிந்து இருந்தனர். இவர்கள் “கார்கள்“ எனப்படுவர் (பிரஞ்சில் சாப்பாடு பரிமாறுபவர்கள் எனப்பொருள்படும்). எனக்கு எப்படி இப்பெயர்கள் எல்லாம் தெரியும் என்று நினைக்கிறீர்கள்? இது மிகவும் சுலபம். நான் ஒரு பிரஞ்சு நாய் தவிர எனது தாய்மொழி பிரஞ்சு ஆகும். அந்த இரவில் அதிகம் நேரம் போனதால் எனக்கும் அலுப்புத்தட்ட நான் மெதுவாக மேசைக்கு கீழால் தவண்டு, தவண்டு போனேன். அப்பிடி ஒரு இடத்தில் சாப்பாடு பரிமாறுபவன் இரண்டு கைகளிலும் காப்பித்தட்டைக் கொண்டு எனது எசமானின் மேசை அருகே வருவதை அவதானித்த நான், அவன் எனது எசமானைத் தாக்க வருகிறான் என்று நினைத்து, நான் ஒருவருக்கும் தெரியாமல் சத்தம் போடாமல் இருக்க மே என்பதையும் மறந்து அவனை நோக்கிப் பெரிய சத்தமாக ஒரு குலைப்பு குலைத்து அவனைப் பயப்படுத்திவிட்டேன். இதனால் அவன் கொண்டு வந்த மண்ணிறத் தண்ணீர் எல்லோர் மேலும் தெறித்துப் பறந்ததால் எல்லோரும் அந்த மண்ணிறத் தண்ணீரில் குளித்து விட்டனர். என்னை ஒருவரும் பிழை சொல்லக்கூடாது. ஏனெனில் எசமானைக் காப்பது எனது கடமை. ஆதலால் நான் எனது கடமையைத்தான் செய்தேன்.



எனது எசமான் ஒரு அ”,உணவுத் [தொழிற்சாலை] அதிபர் என்பதால், அவர் என்னை எடுத்து வளர்க்கத் தொடக்கியபின் நான் சாப்பாட்டுக்கு யோசிக்கத்தேவையில்லை என்று எண்ணியிருந்தேன். ஆனால் அது தவறு என பின் உணர்ந்து கொண்டேன். எனது எசமான் தனது உணவு வகைகளை விற்பனைக்கு சந்தைக்கு அனுப்ப முதல் தான் அவற்றைச் சாப்பிட்டுப் பார்ப்பார். சில சந்தர்ப்பங்களில் என்னையும் அதனைச் சாப்பிட்டுப் பார்க்கச் செய்வார். எனது வாழ்நாளில் அவர் எனக்கு சகிக்க முடியாத உணவுவகைகளான கீரையும்- சோறும், லீக்சும் - சோறும், பயற்றங்காய் சூப், கோவாச் சூப், ஏன் அவிக்காத கடலையையும் கூட சாப்பிடத் தந்துள்ளார். (ஏனெனில் அந்த உணவுகள் தகரத்தில் அடைப்பதற்கு உகந்தவையோ எனப் பரிசோதித்துப் பார்ப்பதற்கே அவ்வாறு செய்கிறார்).




விசேடமாக மிக அண்மையில் எனது எசமான் பல சுவைகளை உடைய தனது புதிய தகரத்திலடைத்த சோறு, உடன் சாப்பாடு என்பனவற்றின் தயாரிப்பில் மிகவும் உற்சாகமாக இருந்தார். எனக்கு இந்த சுவைகளையுடைய சோற்றைப் பற்றித் தெரியாது. ஆனால் கோழியும், மாடும் நான் சாப்பிட்டுப் பார்த்தபோது பரவாயில்லை. மற்ற மரக்கறியும், கரட், செலரி என்பன எனக்கு அறவே பிடிக்கவில்லை. அவர் என்னை என்ன முயல் என்றா நினைத்தார்? எனக்கு என்ன என்றே விளங்கவில்லை. இந்த மனித ஜென்மங்கள் அவரது தயாரிப்புக்களை பெரிய சந்தையின் தட்டுக்களில் இருந்து வாங்கிக் கொண்டுபோய்ச் சாப்பிடுகிறார்கள்.



அவர்கள் ஏன் இவற்றை விரும்பி வாங்குகின்றார்கள் என்பது இன்னும் எனக்கு ஒரு புதுமையாகவே இருக்கிறது. அவர்கள் உண்மையிலேயே இவற்றை விரும்புகின்றார்களா? எனக்கு மனிதர்களுடைய சுவை உண்மையிலேயே விளங்கவில்லை. ஆனால் உண்மையைச் சொல்லப் போனால் ஒரு நாள் கூட "திருகுடாஸ்" பொருட்களை வாங்கினதை நான் எனது கண்களால் காணவேயில்லை? இருந்தாலும் இர்மா அவரது எல்லாத் தயாரிப்புக்களையும் சாப்பிடுவாள். அவரது சமைக்காத அரிசியைக் கூட. எமது எசமானின் தயாரிப்புக்களே முழு உலகத்திலும் மிகச் சிறந்தவை என்பது இர்மாவின் நினைப்பாகும்.

இங்ஙனம்
உண்மையுள்ள
லக்கி கோக்கலா குடாஸ்

ஆங்கில மொழி மூலத்தின் மொழிபெயர்ப்பு
சந்திரா கனகரட்னம்
தேசிய மொழி ஆசிரியர்
ரொறன்ரோ கல்விச்சபை